## <u>கரூர் மாநகராட்சி</u>

**2024 ஆம் ஆண்டு ஆக்ஸ்ட் மாதம் 23 ம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு கரூர் மாநகராட்சியின் மாமன்ற கூட்ட அரங்கில் அவசரக்கூட்டம் நடைபெறும். அதுசமயம் பின்வரும் பொருள் பற்றி முடிவு செய்யப்படும்.**

## <u>பொருள்கள்</u>

**1)**அரசாணை (நிலை) எண்.**92** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி**4**) துறை நாள்.**03.07.2007 –**ன் படி, கரூர் மாநராட்சிக்கு சொந்தமான குத்தகை கடைகளில் **01.07.2016** முதல் **9** ஆண்டுகள் குத்தகை காலம் முடிவுடைந்த **269** கடைகளுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்களின் தலைமையிலான மண்டல கண்காணிப்பு குழுவால் வாடகை மறுநிர்ணயம் செய்யப்பட்டது.

குத்தகை கடைகளுக்கு வாடகை மறுநிர்ணயம் செய்யப்பட்தை எதிர்த்து தொடரப்பட்ட, சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை வழக்கு எண். W.P.(MD)No.17518, 17530,17557,17567,17570,17573,17576,17580,17582 / 2020 (9 கடை உரிமதார்கள்) மற்றும் W.P.(MD)No.18946,18955,18962,18968 to 18970,18972,18986 to 18989,19005,19011,19013/2020 (14 கடை உரிமதார்கள்)–ல் **04.12.2020** மற்றும் **22.12.2020** அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் மனுதாரர்களுக்கு உரிய நேரடி விசாரணைக்கு வாய்ப்பளித்து புதியதாக பரிசீலனை செய்து சட்ட விதிகளுக்கு உட்பட்டு உத்தரவு பிறப்பிக்க தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.**14/2021**/ஆர்–**2** நாள்.**12.02.2021, 23.02.2021 (9** கடைகள்) மற்றும் நாள்.**08.03.2021 (14** கடைகள்) கடிதத்தில் தெரிவித்ததின் பேரில், நேரடி விசாரணைக்கு ஆஜராக கோரி இவ்வலுவலக அறிவிப்பு வாயிலாக சம்மந்தப்பட்டவர்களுக்கு தெரிவிக்கப்பட்டது. சம்மந்தப்பட்ட **23** நபர்களும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகி அவர்களது கோரிக்கையினை எழுத்துப்பூர்வமாக சமர்பிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.**14/2021**/ஆர்–**2** நாள்.**29.03.2021 (9** கடைகள்) மற்றும் ந.க.எண்.**14/2021**/ஆர்–**2** நாள்.**29.03.2021 (14** கடைகள்) செயல்முறை உத்தரவில், **வரிசை எண். 13 –ல்**

*“ நகராட்சி சட்ட நடைமுறை நூலில் குறிப்பிட்டுள்ள விதிகளின் படி, நகராட்சிகளில் உள்ள அசையா சொத்துக்களை பொது ஏலம் மூலம் குத்தகைக்கு விட ஏதுவாக, குத்தகை தொகையினை நிர்ணயம் செய்யும் அதிகாரம் அந்தந்த நகர் மன்றங்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. எனவே கடந்த **13.10.2020** அன்று கரூர் நகர் மன்றத்தால் எழுப்பப்பட்டுள்ள கேட்பு மாண்பமை நீதிமன்றத்தால்*

*தள்ளுபடி செய்யப்பட்டதுடன், மேற்படி கோரிக்கை குறித்து புதிதாக பரிசீலனை செய்ய உத்தரவிடப்பட்டுள்ளதால் குத்தகை கண்காணிப்பு குழு மேற்கூறிய காரணங்களை கருத்தில் கொண்டு, புதிதாக குத்தகை தொகையை மதிப்பு செய்து, கரூர் நகர் மன்றம் ஒப்புதல் அளிப்பதற்கு ஏற்ப, மனுதாரர்களின் கோரிக்கையை ஏற்று மறு ஆய்வு செய்திட குத்தகை கண்காணிப்பு குழுவிற்கு உத்தரவிடப்படுகிறது.* “ என உத்தரவிடப்பட்டது.

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் உத்தரவிற்கிணங்க, கரூர் மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை உத்தரவில் வாடகை மறு நிர்ணயம் செய்திட மதிப்பீட்டுக் குழு அமைத்து உத்தரவிடப்பட்டது. அதன் பேரில், வாடகை மதிப்பீட்டுக் குழு பரிந்துரைக்கப்பட்டதை, 31.01.2023 ஆம் தேதிய இம்மாமன்ற அவசரக்கூட்டம் தீர்மானம் எண்.884–ல், “*இம்மாநகராட்சிக்கு சொந்தமான 30 கடைகளுக்கு நிலுவைத்தொகை முழுவதும் செலுத்தும்பட்சத்தில் வாடகை குறைப்பு செய்து ஈடு செய்ய தீர்மானிக்கப்பட்டது* “ என தீர்மானம் நிறைவேற்றப்பட்டு தீர்மானத்தின் படி, பேருந்து நிலைய பகுதியில் உள்ள 30 கடைகளுக்கு மட்டும் 01.07.2016 முதல் 30 சதவிகிதம் வாடகை குறைப்பு செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகிறது.

பின்பு, இம்மாநகராட்சிக்கு சொந்தமான குத்தகை கடைகளின் வாடகை நிலுவையை வசூல் செய்யும் பொருட்டு எடுக்கப்பட்ட நடவடிக்கையாக, 28.12.2023 ஆம் தேதிய இம்மாமன்ற தீர்மானம் எண்.1603–ல், “*கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான 352 கடைகளுக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவைத்தொகையினை 31.03.2024–ம் தேதிக்குள் ஒவ்வொரு வாரமும் சம தவணைகளாக செலுத்தப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் குத்தகை உரிமத்தை ரத்து செய்து பொது ஏலம் விட இம்மாமன்றத்தால் தீர்மானிக்கப்பட்டது* “ என வாடகை நிலுவையினை செலுத்த 3 மாதம் கால அவகாசம் கொடுத்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இம்மாமன்ற தீர்மானத்தின் படி, வாடகை நிலுவைத்தொகையினை செலுத்த 3 மாதம் கால அவகாசம் வழங்கியும், உரிமம் புதுப்பிக்கப்பட்ட 75 கடைகள் போக மீதமுள்ள 159 கடைகளில் வாடகை உயர்வு தொடர்பான வழக்கு காரணமாக உரிமம் புதுப்பிக்கப்படாமல் உள்ள 58 கடைகள் போக, மீதமுள்ள 101 கடைகளின் உரிமதாரர்கள்/ அனுபோகதாரர்கள் உரிமம் இன்றி குத்தகை காலத்திற்கு மேல் இருந்ததால் வாடகை நிலுவைத்தொகையினை வசூல் செய்யும் பொருட்டு, தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 பிரிவு 116 மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 விதி எண்.319–ன் படியும்,

தமிழ்நாடு பொது வளாகம் (அனுமதியின்றி இருப்பவர்களை அகற்றுதல்) சட்டம் 1975 (1976ம் வருட தமிழ்நாடு சட்டம் 1) பிரிவு –4ன் கீழ் அனுமதியின்றி இருப்பவர்களை அகற்றுவதற்கான அறிவிப்பு உரிய கால அவகாசம் அளித்து அளிக்கப்பட்ட (படிவம் A) (படிவம் B) மற்றும் (படிவம் C) இம்மாநகராட்சி மூலம் வழங்கப்பட்டும், அதன் தொடர்ச்சியாக உரிமதாரர் எவரும் விளக்கம்

அளிக்கவோ, நிலுவைத்தொகையினை செலுத்தவோ முன்வரவில்லை. ஆதலால், **04.07.2024, 05.07.2024** மற்றும் **09.07.2024** ஆகிய நாட்களில் வாடகை நிலுவை செலுத்தாத **101** கடைகளை மாநகராட்சி வசம் கையகப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் போது, **20** கடைகளின் உரிமதாரர்கள்/அனுபோகதாரர்கள் நிலுவைத்தொகை முழுவதும் செலுத்தியுள்ளனர். மீதமுள்ள **81** கடைகளுக்கும் **08.08.2024** ஆம் தேதிய இம்மாமன்ற அவசரக்கூட்ட தீர்மான எண்.**1960** –ல் "*கரூர் மாநகராட்சிக்கு சொந்தமான **81** கடைகளின் ஜூலை – **2024** வரை உள்ள வாடகை நிலுவைத் தொகை மொத்தம் ரூ.**8,29,19,401/–** ஐ தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் **1998** பிரிவு **116** மற்றும் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் **2023** விதி எண்.**319**–ன் படி சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொண்டு நிலுவைத்தொகையினை வசூல் செய்யவும், மேலும் திருச்சிராப்பள்ளி மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிக்கு கால அவகாசம் வழங்கியும், பழைய பேருந்து நிலையக் கடைஎண்**10.** மற்றும் **12** ஆகிய **2** கடைகளுக்கு **30** சதவிகிதம் வாடகை குறைப்பு செய்து வசூல் செய்யவும், மீதமுள்ள **78** கடைகளை பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி மூலம் ஏலம் விடவும் தீர்மானிக்கப்பட்டது.* " என தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

தற்போது பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி மூலம் மேல் நடவடிக்கையில் உள்ள 78 கடைகளின் உரிமதாரர்கள்/அனுபோகதாரர்களில் **கீழ்க்கண்ட பட்டியலில் கண்டுள்ள 16** கடைகளின் உரிமதாரர்கள்/அனுபோகதாரர்கள் மட்டும் கரூர் மாமன்ற தீர்மானம் எண்.884 நாள்.**31.01.2023 –**ல் பேருந்து நிலைய கடைகளுக்கு **01.07.2016** முதல் மறுநிர்ணயம் செய்யப்பட்ட வாடகைத் தொகையில் **30** சதவிகிதம் குறைப்பு செய்தது போலவும் தங்களுக்கும் **30** சதவிகிதம் வாடகை தொகையினை குறைப்பு செய்து தரும் படியும், மேலும் **70** சதவிகிதம் வாடகையை செலுத்தியுள்ளதால் தங்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வண்ணம் மாநகராட்சியால் கையகப்படுத்தப்பட்ட கடைகளை பொது ஏலம் நடவடிக்கை ஏதும் மேற்கொள்ளாமல் மீண்டும் தங்களிடமே ஒப்படைக்கக் கோரி விண்ணப்பித்துள்ளனர்.

இதற்கிடையில், அரசாணை (2ப) எண்.**66**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள். **06.08.2024** *வரிசை எண்.**3*** –ல்

*"(XI) தற்போது **9** ஆண்டுகள் நிறைவடைந்து வாடகை மறு நிர்ணயம் செய்துள்ள கடைகளில் **5** மடங்கிற்கு மேல், வாடகை உயர்வு செய்யப்பட்டுள்ள இனங்களில் பெருமளவு தொகை செலுததப்படாமல் வழக்குகள் தொடரப்பட்டு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு வருவாய் இழப்பு ஏற்படுவதால், இவற்றிற்கு மாநகராட்சிகள் / நகராட்சிகளில் இனங்கள் வாரியாக கண்டறிந்து தீர்வு காணும் வகையில் மண்டல / மாநகர அளவில் குழு அமைக்கலாம்.*

*(XII) நகராட்சிகளுக்கு மண்டல அளவிலும், மாநகராட்சிகளுக்கு மாநகர அளவிலும், கீழே குறிப்பிடப்பட்டுள்ள துணைக்குழுக்கள் தொடர்ந்து செயல்படலாம் என்றும், மேலும் மண்டல*

*துணைக்குழு மற்றும் மாநகர துணைக்குழுவில் தலா இரண்டு வணிகர் சங்க மாவட்ட நிர்வாகிகளை அலுவல்சாரா உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளலாம்.*

***<u>மாநகராட்சி – துணைக்குழுக்கள்</u>***

***குழு –2 சேலம், வேலூர், ஒசூர், கரூர் மாநகராட்சிகள்***

| வ.எண் | குழுவின் உறுப்பினர்கள் | பதவியின் பெயர் | மாநகராட்சிப்பெயர் |
|---|---|---|---|
| 1 | தலைவர் | துணை ஆணையர் | சேலம் |
| 2 | கூட்டுநர் | உதவி ஆணையர் (வருவாய்) | சேலம் |
| 3 | உறுப்பினர்கள் | (1) செயற்பொறியாளர் (பணிகள்)<br>(2) உதவி ஆணையர் (வருவாய்) / வருவாய் அலுவலர் /<br>உதவி வருவாய் அலுவலர் | வேலூர் |
| 4 | | (3) செயற்பொறியாளர் (பணிகள்)<br>(4) உதவி ஆணையர் (வருவாய்) / வருவாய் அலுவலர் /<br>உதவி வருவாய் அலுவலர் | ஒசூர் |
| 5 | | (3) செயற்பொறியாளர் (திட்டம்)<br>(4) உதவி ஆணையர் (வருவாய்) / வருவாய் அலுவலர் /<br>உதவி வருவாய் அலுவலர் | கரூர் |

*(XIII) மேற்குறிப்பிட்டுள்ள துணைக்குழுக்களில் மேற்கொள்ளப்பட்ட முடிவுகளை சம்மந்தப்பட்ட நகர்மன்ற / மாமன்றத்தில் பொருள் வைத்து ஒப்புதல் பெற்று முடிவு செய்யலாம்.*

*(XIV) மேலே குறிப்பிட்டுள்ள நிபந்தனை / நெறிமுறைகளுக்கு மாறாக மாநகராட்சி / நகராட்சிகளில் ஏதேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டிய நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குநரின் அனுமதி பெற்ற பின்னரே அவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இதன் மூலம் குத்தகை / வாடகை இனங்கள் தொடர்பான குறைகள் மற்றும் வேறுபாடுகளை மண்டல / மாநகர துணைக்குழுக்கள் அளவிலேயே தீர்வு காணலாம். அவ்வாறு தீர்வு காணாத இனங்களில் ''மாநில வழிகாட்டுதல் குழு'' –விற்கு தீர்வு காண பரிந்துரை செய்து அனுப்பப்பட வேண்டும்."* என அரசாணையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அரசாணை (2ப) எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024 மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| குத்தகை இனத்தின் விபரம் | | | | கடையின் அளவு சதுரடி | 2016–க்கு முன் இருந்த பழைய வாடகை ரூ. | அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.2007 –ன் படி 01.07.2016 முதல் மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை ரூ. | 2019 மற்றும் 2022 –புதுப்பித்தலுக்கு பின் வாடகை ரூ. | ஆகஸ்ட்–2024 வரை செலுத்த வேண்டிய மொத்த தொகை ரூ. | உரிமதாரர்/ அனுபோகதாரரால் செலுத்தப்பட்ட 70 % வாடகைத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ.எண் | ஒதுக்கீட்டு எண் | உரிமதாரர் / அனுபோகதாரர் பெயர் | கடை விபரம் | | | | | | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 1 | 082/20000248 | சி.நாகம்மாள்/ பாரி | வெங்கடேஸ்வரா சாலை கட்டிடக்கடை எண்.01 | 204 | 3366 | 8000 | 10580 | 1055250 | 878838 |
| 2 | 082/20000249 | வி.ரத்தினம் / திருமுடி | வெங்கடேஸ்வரா சாலை கட்டிடக்கடை எண்.02 | 204 | 3358 | 8000 | 10580 | 1055250 | 738878 |
| 3 | 082/20000250 | ருக்மணி /ம. மகேஸ்வரி | வெங்கடேஸ்வரா சாலை கட்டிடக்கடை எண்.03 | 204 | 4268 | 8000 | 10580 | 1055250 | 943434 |
| 4 | 082/20000251 | திருமுடி / திருமுடி | வெங்கடேஸ்வரா சாலை கட்டிடக்கடை எண்.04 | 204 | 4697 | 8000 | 10580 | 1055250 | 813204 |
| 5 | 082/20000275 | முகம்மது குட்டி / எம்.ரத்தினம் | வெங்கடேஸ்வரா சாலை கட்டிடக்கடை எண்.29 | 160 | 1015 | 6500 | 8596 | 857391 | 676587 |
| 6 | 082/20000276 | பாலாயி அம்மாள் / எம்.ரத்தினம் | வெங்கடேஸ்வரா சாலை கட்டிடக்கடை எண்.28 | 160 | 1051 | 6500 | 8596 | 857391 | 678565 |
| 7 | 082/20000198 | எம்.கிருஷ்ணசாமி / ஏ. அப்துல் ரஹ்மான் | ஆஸ்பத்திரி சாலை வடபுறம் இரும்பு பெட்டிக்கடை | 104 | 788 | 4000 | 5290 | 527625 | 369594 |
| 8 | 082/20000221 | பி.சீனிவாசன் / பி. சீனிவாசன் | மினி பேருந்து நிலைய கடை எண்.01 | 260 | 4446 | 26000 | 34385 | 3429564 | 2714242 |

| குத்தகை இனத்தின் விபரம் | | | | கடையின் அளவு சதுரடி | 2016–க்கு முன் இருந்த பழைய வாடகை ரூ. | அரசாணை எண்.92 நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை நாள்.03.07.2007 –ன் படி 01.07.2016 முதல் மறு நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை ரூ. | 2019 மற்றும் 2022 –புதுப்பித்தலுக்கு பின் வாடகை ரூ. | ஆகஸ்ட்–2024 வரை செலுத்த வேண்டிய மொத்த தொகை ரூ. | உரிமதாரர்/ அனுபோகதாரரால் செலுத்தப்பட்ட 70 % வாடகைத் தொகை ரூ. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வ.எண் | ஒதுக்கீட்டு எண் | உரிமதாரர் / அனுபோகதாரர் பெயர் | கடை விபரம் | | | | | | |
| 9 | 082/20000184 | எஸ். ராஜம்மாள் / ஆறுமுகம் | ஜவஹர் பஜார் கடை எண்.04 | 60 | 2819 | 3000 | 3968 | 395719 | 274343 |
| 10 | 082/20000200 | எஸ்.பிச்சை / எல். குமார் | ஆஸ்பத்திரி சாலை கடை எண்.01 | 198 | 966 | 9000 | 11903 | 1187157 | 831186 |
| 11 | 082/20000201 | எம்.வரதராஜன் / சி. ஆனந்தன் | ஆஸ்பத்திரி சாலை கடை எண்.02 | 198 | 1111 | 9000 | 11903 | 1187157 | 1006875 |
| 12 | 082/20000202 | என்.ராஜம்மாள் / அசோகா பன்னீர் செல்வம் | ஆஸ்பத்திரி சாலை கடை எண்.03 | 275 | 1111 | 9000 | 11903 | 1187157 | 903793 |
| 13 | 082/20000117 | எம். ராமையா / டி. கணேஷ்ராஜா | வெங்கடேஸ்வரா சாலை தரைக்கடை எண்.45 | 156 | 73 | 5000 | 6613 | 659532 | 461672 |
| 14 | 082/20000118 | எம். வடிவேல் / லலிதா | வெங்கடேஸ்வரா சாலை தரைக்கடை எண்.45 | 100 | 73 | 3000 | 3968 | 395719 | 277012 |
| 15 | 082/20000120 | எம். மாரீஸ்வரன் / அசோக் | வெங்கடேஸ்வரா சாலை தரைக்கடை எண்.48 | 108 | 74 | 3500 | 4629 | 461672 | 323347 |
| 16 | 082/20000120 | கே. ராமசாமி / வெ. சதாசிவம் | புதிய பேருந்து நிலைய வடபுறம் கடை எண்.01 | 144 | 3517 | 11500 | 15209 | 1516922 | 1061846 |

எனவே மேற்காணும் பட்டியலில் கண்டுள்ள மாநகராட்சி கடைகளின் குத்தகை உரிமதார்கள் / அனுபோகதாரார்கள் கோரியுள்ளவாறு, 30 சதவிகிதம் வாடகை குறைப்பு செய்வது தொடர்பாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெறவும், பொதுஏல நடவடிக்கை மேற்கொள்ளாமல் குத்தகை உரிம காலம் வரை கடையினை நடத்தி கொள்ள அனுமதிப்பது குறித்தும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u> :**

1) அரசாணை (2ப) எண்.66 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.4) துறை நாள்.06.08.2024 –ன் படி நடவடிக்கை மேற்கொள்ள மாமன்றம் அனுமதிக்கலாம்.

2)மேற்படி அரசாணையை மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம். **(அ6/1255/2020) தீர்மான எண்.1986** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. மேற்கண்ட 16 கடைகளுக்கும் 30 சதவீதம் வாடகை குறைப்பு செய்திட நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது. மேலும் கடை உரிமைதாரர்கள் / அனுபோகதாரர்கள் கோரிக்கையினை ஏற்று அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கா வண்ணம் அதற்குரிய 70 சதவிகிதம் வாடகைத் தொகையினை வசூல் செய்ததை ஏற்க்கொண்டு கடை நடத்திட அனுமதித்து இம்மான்றம் தீர்மானிக்கப்பட்டது.

**2.**கரூர் மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள துவக்கப்பள்ளி நடுநிலைப்பள்ளி மேல்நிலைப்பள்ளி மற்றும் உயர்நிலைப்பள்ளிகளில் கல்வி மேலாண்மை மறுகட்டமைப்பு குழு அமைக்க ஒரு பள்ளிக்கு இரண்டு பிரதிநிதிகள் தேர்வு செய்து பெயர் பட்டியல் அனுப்பி வைக்குமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் கரூர் அவர்களின் கல்வி மேலாண்மைகுழு மறுகட்டமைப்பு சார்ந்த ஆய்வுக்கூட்ட நாள்.23.07.2024 தேதியில் அறிவுறுத்தப்பட்டுள்ளது அதனடிப்படையில் இம்மாநகராட்சிக்குப்பட்ட 41 பள்ளிகளுக்கு கீழ்கண்டுள்ளவாறு இம்மாமன்ற உறுப்பினர்களை கல்வி மேலாண்மை மறுகட்டமைப்பு குழு பிரதிநிதிகளாக தேர்வு செய்ய மாமன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

## <u>இம்மாநகராட்சிக்குட்பட்ட துவக்கப்பள்ளி, நடுநிலைப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலை பள்ளிகளுக்கு கல்வி மேலாண்மை மறு கட்டமைப்பு குழு மாமன்ற உறுப்பினர்கள்</u>

## <u>பகுதி – 1</u>

| வ. எண் | வார்டு எண் | பள்ளியின் பெயர் | வார்டு எண் | நியமனம் செய்யும் இம்மாமன்ற பிரதிநிதிகள் |
|---|---|---|---|---|
| 1 | 15 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, நரிகட்டியூர் | 15 | திரு.ஆ.தியாகராஜன், 9952433637 |
| | | | 39 | திருமதி.பா.சூரியகலா, 9865115682 |
| 2 | 42 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, தாந்தோணிமலை | 42 | திரு.செ.கார்த்திக்குமார், 9894299511 |
| | | | 41 | திரு.ம.தண்டபாணி, 9865471109 |
| 3 | 46 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, டி.செல்லாண்டிபாளையம் | 46 | திரு.தாரணி.ப.சரவணன், 9944433864 |
| | | | 45 | திரு.ம.ராஜேந்திரன், 9843257670 |
| 4 | 48 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, டி.காளியப்பகவுண்டனூர். | 48 | திரு.ரா.வேலுச்சாமி, 9443143038 |
| | | | 44 | திரு.சு.மோகன்ராஜ், 9443367706 |
| 5 | 13 | ஆதி திராவிடர் துவக்கப்பள்ளி, சணப்பிரட்டி | 13 | திருமதி.செ.சரண்யா, 8190032628 |
| | | | 16 | திரு.பா.பூபதி, 9080784985 |
| 6 | 48 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, வெங்கக்கல்பட்டி | 48 | திரு.ரா.வேலுச்சாமி, 9443143038 |
| | | | 44 | திரு.சு.மோகன்ராஜ், 9443367706 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7 | 47 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, தோரணக்கல்பட்டி | 46 | திரு.தாரணி.ப.சரவணன், 9944433864 |
| | | | 47 | திரு.பொ.பழனிச்சாமி, 8524926725 |
| 8 | 47 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, பண்டுதகாரன்புதூர் | 46 | திரு.தாரணி.ப.சரவணன், 9944433864 |
| | | | 47 | திரு.பொ.பழனிச்சாமி, 8524926725 |
| 9 | 14 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி S.வெள்ளாளப்பட்டி (வடக்கு) | 13 | திருமதி.செ.சரண்யா, 8190032628 |
| | | | 15 | திரு.தியாகராஜன் 9952433637 |

## பகுதி – 2

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | 4 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, வாங்கப்பளையம் | 5 | திரு.எம்.பாண்டியன், 9384942292 |
| | | | 6 | திருமதி.எஸ்.மாரியம்மாள், 8012130790 |
| 11 | 32 | மாநகராட்சி துவக்கப்பள்ளி, கோட்டைமேடு கரூர். | 32 | திருமதி.வி.நிவேதா, 8778597639 |
| | | | 31 | திருமதி.ப.சாந்தி, 9715553355 |
| 12 | 33 | மாநகராட்சி குமரன் துவக்கப்பள்ளி கரூர். | 33 | திருமதி.எ.பாலவித்யா,9443726403 |
| | | | 34 | திருமதி.ர.தெய்வாணை, 9943620545 |
| 13 | 20 | மாநகராட்சி முஸ்லீம் துவக்கப்பள்ளி கரூர். | 20 | திரு.ஏ.லாரன்ஸ்,9677559041 |
| | | | 21 | திருமதி.வெ.நந்தினி, 9952488666 |
| 14 | 11 | மாநகராட்சி துவக்கப்பள்ளி, பாலம்மாள்புரம் | 7 | திருமதி.அ.பூங்கோதை, 8695336608 |
| | | | 10 | திரு.ந,ரஞ்சித்குமார், 9944535517 |
| 15 | 29 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, எல்.ஜி.பி நகர் | 29 | திருமதி.ர.புவனேஸ்வரி, 9443146267 |
| | | | 30 | திருமதி.சி.யசோதா, 9786440590 |
| 16 | 1 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, வேலுச்சாமிபுரம் | 28 | திருமதி.ம.சுகந்தினி, 9994611017 |
| | | | 1 | திரு.ம.சரவணன், 8428801345 |
| 17 | 1 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, பெரிய கோதூர். | 1 | திரு.ம.சரவணன், 8478801345 |
| 18 | 1 | ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி, அரிக்காரம்பாளையம். | 2 | திரு.க.வடிவேல்அரசு, 7871341991 |
| 19 | 20 | கரூர் மாநகராட்சி மாவடியான் துவக்கப்பள்ளி | 20 | திரு.எ.லாரன்ஸ் 9677559041 |
| | | | 35 | திருமதி.இந்திராணி 8778825202 |

## பகுதி – 3

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | 2 | ஊராட்சி ஒன்றிய மேல்நிலைப்பள்ளி, பெரியகுளத்துபாளையம். | 2 | திரு.க.வடிவேல்அரசு, 7871341991 |
| | | | 7 | திருமதி.அ.பூங்கோதை, 8695336608 |
| 21 | 23 | கரூர் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி கரூர். | 23 | திருமதி.எஸ்.வளர்மதி 9842413266 |
| | | | 22 | திருமதி,ச.பிரேமா 9677968284 |
| 22 | 21 | அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி கரூர் | 21 | திருமதி.வெ.நந்தினி 9952488666 |
| | | | 22 | திருமதி,ச.பிரேமா 9677968284 |
| 23 | 4 | அரசு உயர்நிலைப்பள்ளி, வாங்கப்பாளையம் | 5 | திரு.எம்.பாண்டியன், 9384942292 |
| | | | 6 | திருமதி.எஸ்.மாரியம்மாள், 8012130790 |

| | | | | |
|---|---|---|---|---|
| 24 | 33 | மாநகராட்சி குமரன் உயர்நிலைப்பள்ளி கரூர். | 33 | திருமதி.எ.பாலவித்யா,9443726403 |
| | | | 34 | திருமதி.ர.தெய்வாணை, 9943620545 |
| 25 | 34 | மாநகராட்சி பசுபதீஸ்வரர் பெண்கள் மேல்நிலைப்பள்ளி கரூர். | 32 | திருமதி.வி.நிவேதா, 8778597639 |
| | | | 20 | திரு.எ.லாரன்ஸ் 9677559041 |
| 26 | 46 | அரசு உயர்நிலைப்பள்ளி தோ.செல்லாண்டிபாளையம். | 46 | திரு.தாரணி.ப.சரவணன், 9944433864 |
| | | | 45 | திரு.ம.ராஜேந்திரன், 9843257670 |
| 27 | 13 | ஆதிதிராவிடர் மேல்நிலைப்பள்ளி சணப்பிரட்டி | 13 | திருமதி.செ.சரண்யா, 8190032628 |
| | | | 16 | திரு.பா.பூபதி, 9080784985 |
| 28 | 44 | அரசு மேல்நிலைப்பள்ளி தாந்தோணி | 44 | திரு.சு.மோகன்ராஜ் 9443367706 |
| | | | 48 | திரு.ரா.வேலுசாமி 9443143038 |
| 29 | 32 | மாநகராட்சி கோட்டைமேடு உயர்நிலைப்பள்ளி கரூர். | 32 | திருமதி.வி.நிவேதா, 8778597639 |
| | | | 31 | திருமதி.ப.சாந்தி, 9715553355 |

## <u>பகுதி – 4</u>

| | | | | |
|---|---|---|---|---|
| 30 | 2 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, பெரியகுளத்துபாளையம் | 2 | திரு.க.வடிவேல்அரசு, 7871341991 |
| | | | 7 | திருமதி.அ.பூங்கோதை, 8695336608 |
| 31 | 9 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, வெங்கமேடு | 9 | திரு.ரூா.ஸ்டீபன்பாபு, 9894036806 |
| | | | 8 | திருமதி.வ.ராஜேஸ்வரி, 9787567292 |
| 32 | 3 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி VVG நகர், வெங்கமேடு | 3 | திரு.ச.சக்திவேல், 9944416618 |
| | | | 6 | திருமதி.செ.மாரியம்மாள், 9865711977 |
| 33 | 22 | ஜெயபிரகாஷ் மாநகராட்சி நடுநிலைப்பள்ளி கரூர். | 22 | திருமதி.ச.பிரேமா, 9677968284 |
| | | | 21 | திருமதி.வெ.நந்தினி, 9952488666 |
| 34 | 35 | மாநகராட்சி உமையாள் நடுநிலைப்பள்ளி கரூர். | 35 | திருமதி.இந்திராணி, 8778825202 |
| | | | 34 | திருமதி.ரா.தெய்வாணை, 9943620545 |
| 35 | 28 | ஆதிதிராவிடர் நடுநிலைப்பள்ளி, திருக்காம்புலியூர் | 28 | திருமதி.ம.சுகந்தினி, 9994611017 |
| | | | 1 | திரு.ம.சரவணன், 8428801345 |
| 36 | 19 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, பசுபதிபாளையம் | 19 | திருமதி.கே.அருள்மணி, 9080489696 |
| | | | 12 | திருமதி.மஞ்சுளாபெரியசாமி, 9443146999 |
| 37 | 36 | மாநகராட்சி நடுநிலைப்பள்ளி, திருமாநிலையூர் | 36 | திருமதி.பி.வசுமதி, 9443767003 |
| | | | 43 | திருமதி.அ.கயல்விழி, 9943324525 |
| 38 | 48 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி ஆச்சிமங்கலம் (A.அருகம்பாளையம்), தாந்தோணிமலை | 48 | திரு.ரா.வேலுசாமி, 9443143038 |
| | | | 44 | திரு.சு.மோகன்ராஜ், 9443367706 |
| 39 | 47 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, கோடங்கிபட்டி | 47 | திரு.பொ.பழனிச்சாமி, 8524926725 |
| | | | 48 | திரு.ரா.வேலுச்சாமி, 9443143038 |
| 40 | 46 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி , ராயனூர் | 46 | திரு.பி.சரவணன், 9944433864 |
| | | | 45 | திரு.மா.ராஜேந்திரன், 9843257670 |
| 41 | 18 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, காந்திகிரமம் காலனி | 18 | திரு.எம்.தங்கராஜ், 9842645744 |
| | | | 16 | திரு.பா.பூபதி, 9080784985 |

**அலுவலகக் குறிப்பு.**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்
2. பள்ளி மேலாண்மை மறுகட்டமைப்பு குழு பகுதி–1 மற்றும் பகுதி–2 க்கான கூட்டம் நடத்துவதற்கு வணக்கத்திற்குறிய மேயர் அவர்களின் முன் அனுமதி வழங்கியதற்கும் இம்மாமன்றம் அங்கீகரிக்கலாம். (எச்4/2803/2022)

**தீர்மான எண்.1987** அலுவலக குறிப்பு ஏற்று அனுமதிக்கப்பட்டது. மேலும் வரிசை எண்.21ல் வார்டு எண்–22 திருமதி.ச.பிரேமா அவருக்கு பதிலாக வார்டு எண்–26 திரு.ம.ரமேஷ் அவர்களை கரூர் மாநகராட்சி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி கல்வி மேலாண்மை குழு மறு கட்டமைப்பு பிரதிநிதியாக தேர்வு செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கப்பட்டது.

வரிசை எண்.25ல் வார்டு எண்–32 திருமதி.வி.நிவேதா அவருக்கு பதிலாக வார்டு எண்–25 திருமதி.ச.நிர்மலாதேவி அவர்களை மாநகராட்சி பசுபதீஸ்வரா பெண்கள் மேல்நிலைப்பள்ளி கல்வி மேலாண்மை குழு மறு கட்டமைப்பு பிரதிநிதியாக தேர்வு செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கப்பட்டது.

வரிசை எண்.29ல் வார்டு எண்–31 திருமதி.ப.சாந்தி அவருக்கு பதிலாக வார்டு எண்–30 திருமதி.சி.யசோதா அவர்களை கரூர் மாநகராட்சி கோட்டைமேடு உயர்நிலைப்பள்ளி கல்வி மேலாண்மை குழு மறு கட்டமைப்பு பிரதிநிதியாக தேர்வு செய்ய இம்மாமன்றம் தீர்மானிக்கப்பட்டது.

(ஒ/ம்) வெ.கவிதா
மாநகராட்சி மேயர்

//உண்மை நகல்//

ஆணையர்
கரூர் மாநகராட்சி